# புதியவன்
PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

◆பாதை 01 ◆பயணம் 103 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 21 புதன், 04/06/2014 (TP- 0233238444)

www.putheyavan.com



PUBLIC LIBRARY JAFFNA.



**நித்திலம் பதிப்பகம்**

#87 பிரதான வீதி, சின்னக்கடை
மன்னார்.

*டிஜிட்டல் பிறின்ரிங் (Banner & Sticker )
*Offset Printing (4 colours)
*இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.

தொலைபேசி- 023-2223545,
மின்னஞ்சல் :- nithithilam31@gmail.com


## முல்லைத் தீவில் கவனயீர்ப்பு போராட்டம்



**(யாழ்ப்பாணம்)**
ஆட் கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்தக் கோரி எதிர்வரும் 05ம் திகதி முல்லைத் தீவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப் படவுள்ளது. காலை 9.00மணி தொடக்கம் 11.00 மணிவரை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இக்கவன யீர்ப்பு போராட்டத்தை சரணடைந்து காணாமல் போனோரது உறவினர்கள் மேற்கொள்ளவுள்ளனர்,


அன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நடை (09ம் பக்கம்பார்க்க)

## ஹக்கீமை கட்சித் தலைவராக கருத முடியாது பிரதி சபாநாயகர்

**(கொழும்பு)**
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமை கட்சித் தலைவராக கருத முடியாது என பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றில் ஹக்கீமை கட்சித் தலைவராக கருத முடியாது. ரவூப் ஹக்கீமை சபாநாயகர் கட்சித் தலைவராக அங்கீகரிக்கவில்லை.

கட்சித் தலைவர்கள் பட்டியலிலும் சபாநாயகர், ஹக்கீமின் பெயரை உள்ளடக்கவில்லை.


எனவே (09ம் பக்கம்பார்க்க)



# தமிழீழத்துக்கான கருத்துக் கணிப்பை இலங்கையில் நடத்தவேண்டும்

## ஐநா மூலம் வலியுறுத்த மேடியிடம் ஜெயலலிதா வேண்டுகோள்

**(டெல்லி)**
இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளைப் பிரித்து தனி ஈழம் அமைக்க இலங்கைத் தமிழர் மத்தியும் புலம் பெயர்ந்த தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்தக்கோரி ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா தீர்மானம் கொண்டுவர வேண்டுமென பிரதமர் நரேந்திர மோடியிடம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.
நேற்று செவ்வாய்க்கிழமை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியைச்



சந்தித்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, இலங்கை, தமிழகம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கோரிக்கை மனு ஒன்றையும் அளித்தார்.

இலங்கை பிரச்சினை குறித்து, அக்கடிதத்தில். ஜெயலலிதா,

இலங்கையில் நடந்த இனப் படுகொலையைக் கண்டித்து ஐநாவில் இந்தியா கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டும்,
தனித் தமிழ் (09ம் பக்கம்பார்க்க)

## சீரற்ற காலநிலையினால் பலியானோரின் எண்ணிக்கை 23 ஆக அதிகரிப்பு!

**(கொழும்பு)**
இலங்கையில் சீரற்ற காலநிலை மாற்றத்தினால் பெய்த கனமழை காரணமாக வெள்ளம் மற்றும் மண்சரிவினால் இதுவரை 6 மாவட்டங்களில் 23 பேர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவற்றில் களுத்துறை மாவட்டத்திலேயே அதிகளவாக 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் கொழும்பு மற்றும் இரத்தினபுரியில் மூவர் பலியாகியுள்ளதோடு, காலி, மாத்தளை மற்றும் குருநாகலில் தலா ஒரு மரணங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் (09ம் பக்கம்பார்க்க)

## இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் புதியதோர் அணுகுமுறையை இந்தியா கையாள வேண்டும்

**(கனடா)**
இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையில் பலமான, உறுதியான, தீர்க்கதரிசனமான நிலைப்பாட்டினை, தங்கள் தலைமையிலான அரசாங்கம் உருவாக்கும் என பெரிதும் நம்புகின்றோம் என்று, இந்தியாவில் புதிதாக ஆட்சிப்பீடமேறியுள்ள பிரதமர் மோடி அவர்களுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் கோரியுள்ளார்..
இலங்கைத்தீவில் நிலவும் தமிழினத்தின் (09ம் பக்கம்பார்க்க)



## கைதான இந்திய மீனவர்களை உடன்விடுவிக்குமாறு ஜனாதிபதி அவசர உத்தரவு

**(கொழும்பு)**
இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இரு தினங்களுக்கு முன்னர் தலைமன்னார் கடற் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களையும் உடன் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபகச உத்தரவிட்டுள்ளார்.
திங்கட்கிழமை இரவு இது குறித்த அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டதாக இந்து (09ம் பக்கம்பார்க்க)

## த.தே.ம. மு அலுவலகத்துள் இராணுவம் நுழைந்தது

**(யாழ்ப்பாணம்)**
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.நகரின் 3ம் குறுக்குத் தெருவிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு நேற்று மாலை படையினர் அடாத்தாக உள் நுழைந்துள்ளதாக குற்றஞ்சாட்டப் படுகின்றது. நேற்று (09ம் பக்கம்பார்க்க)

## வாக்காளர் பதிவு முறைமையில் மாற்றம் வேண்டும் - கபே

**(கொழும்பு)**
வாக்காளர் பதிவு முறைமையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டுமென முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களில் ஒன்றான கபே தெரிவித்துள்ளது. ஒவ்வொரு (09ம் பக்கம்பார்க்க)


24X7 மணிநேர முதன்மை செய்திகளுடன்..
www.putheyavan.com
http://www.

அரசியல்,சினிமா,அழகு,திரைவிமர்சனம்,விநோதம் போன்ற சுவையான அம்சங்களுடன்.
உள்ளதை உள்ளபடி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை........

## மன்னாரில் குளங்கள், வாய்க்கால்கள் புனரமைப்பிற்கு அரசாங்கம் 50மில்லியன் ரூபா ஒதுக்கீடு



(அலுவலகச்செய்தியாளர்)
மன்னார் மாவட்டத்தில் உள்ள குளங்கள் வாய்க்கால்கள் புனரமைப்பதற்கு அரசாங்கம் 50மில்லியன் ரூபாயினை வழங்கியி ருப்பதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தின் விவசாய செய்கையினை ஊக்குவிக்கும் பொருட்டு மேற்படி தொகை ஜனாதிபதியினால் விசேடமாக வழங்கப்பட்டிருப்பதாக மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பரிய தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் விவசாய செய்கைக்கு பெரிதும் பயன் படுத்தப்பட்டு வரும் கட்டுக்கரை குளத்தின் கீழான சிறுகுளங்கள் மற்றும் வாய்க்கால்கள் என்பவற்றின் புனரமைப்பு தொடர்பில் அரசாங்க அதிபர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

இந்த நிலையிலே மன்னார் மாவட்டத்தின் விவசாய செய்கையினை மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி மாவட்டச் செயலகத்திற்கு சுமார் 50மில்லியன் ரூபாவினை ஒதுக்கியிருப்பதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பரிய மேலும் தெரிவித்தார்.

## வவுனியா ஓமந்தை அரசன்குளம் பகுதியில் ஆணின் சடலம் மீட்பு






(வவுனியா)
வவுனியா ஓமந்தை அரசன்குளம் பகுதியில் புகையிரத பாதையோரமாக ஆண் ஒருவரின் சடலம் அடிபட்டகாயங்களுடன் நேற்று காலை, (03.06) மீட்கப்பட்டுள்ளது.

இதுவரையில் அடையாளம் காணப்படாத சடலமானது சுமார் 60 வயது மதிக்கதக்க வெள்ளை நிற சேட்டும் வெள்ளை நிற வேட்டியும் அணிந்திருந்த நிலையில் இவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச்சடலம் தலைப்பகுதியில் அடிபட்ட காயங்களுடன் உடல் பகுதியில் அங்கங்கே சிறு காயங்களுடன் காணப்படுகிறது. புகையிரதத்தில் பயணிக்கும் பொழுது தவறி விழுந்திருக்கலாம் அல்லது யாராவது தள்ளி விளுத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்பகிறது

நேற்று அதிகாலை குறித்த பிரதேசத்தின் பிரதேசவாசி மாடு மேய்பதர்க்காக சென்றிருந்தவேளை அடையாளம் காணப்பட்டு பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து யாழ்பாணம் நோக்கி சென்ற புகயிரதத்தில் பயணித்த பயணியாக இருக்கலாம் என சந்தேகிக்கப்பகிறது மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிசார் நடாத்தி வருகின்றனர்

## யாழில் மீட்கப்பட்ட ஆளில்லா விமானம் தொலைத் தொடர்பு நிறுவனத்திற்கு சொந்தமானது

யாழ். குடாநாட்டில் நேற்றுமுன் தினம் கண்டுபிடிக்கப்பட்ட ஆள் இல்லாத சிறிய விமானம், இலங்கையில் இயங்கும் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவ்னம் ஒன்றிற்குச் சொந்தமானதென யாழ். பொலிஸார் கூறியுள்ளதுடன், அதனை உரிமையாளர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

நேற்றுமுன் தினம் யாழ்.நகரிலுள்ள பிள்ளையார் இன் விடுதியின் மேற்கூரையிலிருந்து குறித்த விமானம், விடுதி ஊழியர்கள் கொடுத்த தகவலினடிப்படையில் மீட்கப்பட்டது.

குறித்த விமானத்தை கண்ட ஊழியர் அது வித்தியாசமான ஒரு பொருளாக காணப்படுவதாக கூறியதுடன், அதனை தன்னால் எடுக்க முடியாது என கூறிய நிலையில் படையினருக்கும், பொலிஸாருக்கும் தகவல் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து, அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸாரும், படையினரும் இணைந்து விமானத்தை மீட்டுள்ளனர்.

குறித்த விமானத்தின் கீழ் பொருத்தப்பட்டிருந்த அதி நுட்பம் வாய்ந்த புகைப்படக் கருவி தொடர்பாக பலத்த சந்தேகங்கள் எழுந்திருந்தன.

இந்நிலையில் குறித்த விமானம் தமக்குச் சொந்தமானது என மேற்குறித்த தொலைத்தொடர்பு நிறுவனம் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளதுடன், தொலைபேசி வலையமைப்பு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டபோது விமானம் தொலைந்து போனதாக தெரிவித்துள்ளது.

எனவே யாழ்.பொலிஸாரின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கும் குறித்த விமானத்தை தொலைத்தொடர்பு நிறுவனத்திடம் மீளவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இன்று

வைகாசி -21 புதன்கிழமை 04.06.2014

திதி: ஷஷ்டி
நட்சத்திரம்: ஆயிலியம்

சுப நேரம்: 4.22 - 5.52 வரை
இராகு காலம்: 11.52 - 1.22 வரை
எமகண்டம்: 7.22- 8.52 வரை



## இன்றைய பலன்

04.06.2014

வழங்கியவர் மணிகண்டன்




இன்று, உங்கள் மனதில் கலைரசனை அதிகரிக்கும். இயற்கை அழகு காட்சிகளை ரசித்து மகிழ்வீர்கள். தொழில் வளம் சிறக்க, நேர்த்தியுடன் பணிபுரிவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள்.




இன்று, உங்களின் செயல்பாடு அவசரகதியில் இருக்கும். கவனக்குறைவால் தவறான •மீனிதருக்கு உதவுவதை தவிர்த்திடுங்கள். தொழிலில் இருக்கும் குளறுபடியை, அனுபவசாலியின் ஆலொசனையுடன் சரி செய்வது நல்லது. புதிய இனங்களில், பணச்செலவு ஏற்படலாம். நேரம் தவறாமல் உணவு உண்பது, உடல் நலனை சீராக்கும்.




இன்று, உங்கள் மனம் புகழ்ச்சியை விரும்பும். தகுதிக்கு மீறி பாராட்டுபவர்களிடம் கவனமுடன் இருக்க வேண்டும். கூடுதலாக உழைத்து, தொழிலில் முன்னேற்றம் பெறுவீர்கள். உபரி பணவருமானம் கிடைக்கும். உறவினர் இல்ல சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.




இன்று, உங்களுக்கு அறிமுகம் இல்லாதவரிடம், பொது வி'யம் பேசக்கூடாது. கடின பணிகளில் தற்காப்பு அவசியம். ஆர்வமிக்க செயல்பாடு தொழில், வியாபாரம் வளர உதவும். பணவரவு மிதமான அளவில் கிடைக்கும். வாகன பயணத்தில், மிதவேகம் பின்பற்ற வேண்டும்.




இன்று, உங்கள் நண்பரின் ஆலோசனையால், செயல்களை மாற்றி அமைப்பீர்கள். நல்ல விளைவுகள் திருப்திகரமாக ஏற்படும். தொழிலில் புதிய இலக்கை அடைவீர்கள். சேமிக்கும் அளவில் பணவருமானம் கிடைக்கும். நித்திரையில் இனிய கனவு வரும்.




இன்று, உங்கள் மனதில் சுயகவுரவ சிந்தனை அதிகரிக்கலாம். பிறரை மதித்து பேசுவதால் மட்டுமே, எதிர்பார்ப்பு நிறைவேறும். அதிக உழைப்பால் தொழில் வளம் சீராகும். சொந்த தேவைகளை பூர்த்தி செய்வதில், ஆர்வம் கொள்வீர்கள். மனைவியின் சேமிப்பு பணம், செலவுக்கு கைகொடுக்கும்.




இன்று, நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்காக, முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. அனுகூல சூழ்நிலை அமைந்து ஓரளவு கைகொடுக்கும். தொழில் வளர்ச்சி படிப்படியாக நிறைவேறும். வெளியூர் பயணத்திட்டத்தில் மாறுதல் இருக்கும். குடும்ப உறுப்பினர் ஆதரவாக செயல்படுவர்.




இன்று, உங்கள் உறவினர்களில் அவமதித்த சிலர், அன்பு பாராட்டுகிற நிலை வரும். வெகுநாள் திட்டமிட்ட நல்ல காரியம் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சிப் பணி இனிய அனுபவம் தரும். உபரி பணவருமானம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.




இன்று, உங்கள் எண்ணத்திலும், செயலிலும், சிறுமுரண்பாடு ஏற்படலாம். மனவெறுப்பை, பிறரிடம் வெளிப்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரம் வளர கூடுதல் உழைப்பு தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். உடல் நலத்தில் கூடுதல் கவனம் வேண்டும்.




இன்று, உங்கள் வாழ்வில் சாதகமான நிகழ்வு உண்டாகும். நண்பர், உறவினர்களிடம் மங்கலத் தன்மையுடன் பேசுவீர்கள். சுயமுயற்சியால், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். பணவரவில் லாப விகிதம் கூடும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.




இன்று, உங்கள் செயல்களில் சிறு குளறுபடி ஏற்படலாம். தர்க்கவாதம் பேசுபவரிடம், கருத்து சொல்லக்கூடாது. தொழில் வளம் சீராக, அனுபவசாலியின் ஆலோசனை உதவும். சிரமம் தவிர்க்க கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள். போக்குவரத்தில் கவன நடை நல்லது.




இன்று, உங்கள் செயல்களில் கூடுதல் மதிநுட்பம் நிறைந்திருக்கும். சமூகத்தின் பார்வையில், நல்ல அந்தஸ்து பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணவருமானத்தில் சிறிதளவு தான, தர்மம் செய்வீர்கள். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும்.

## சிந்திக்க சில வரிகள்

**உன்வேதனை பலரை சிரிக்க வைக்கலாம்**
**ஆனால் உன் சிரிப்பு ஒருவரைக்கூட**
**வேதனைப்படுத்தக் கூடாது**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதியவன்
PUTHEYAVAN
இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

# இனக்கலப்பின் அடையாளமா?

தமிழர்களை இலங்கையின் வந்தேறு குடிகளாகவே சிங்கள ஏகாதிபத்தியம் கருதுவ துண்டு நியாயமான வாழ்வியல் கோரிக்கைகளை வேண்டுமென்றே நிராகரிப்பதுடன் இன நல்லுறவுக்கு மாறாகவே நடந்து கொள்கிறார்கள். இதனாலேயே பல்வேறு விதமான பிரச்சனை காணப்பட்டது.

குறிப்பாக எழுபதுக்குப்பின்னர் தெற்கில் தமிழ் பேசுவது என்றாலே மிகவும் அச்சப்பட்டனர் பெண்கள் தமிழ் கலாசாரத்திலிருந்து மாறுபட்டு நெற்றியில் பொட்டு வைக்காமல் வாழ்ந்த காலங்களும் உண்டு.

இதற்காகவே பலர் சிங்களம் கற்கவேண்டிய நிலை காணப்பட்டதுடன் அம் மொழியையே எங்கும் பயன்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

இடைக்காலத்தில் தமிழ் பேசினால் புலிகள் எனும் நிலையும் காணப்பட்டது. இந்த அச்ச நிலைகள் தெற்கின் கடும் போக்கு வாதிகள் மத்தியில் இருந்து இன்னும் முற்றாக நீங்கவில்லை. இலங்கை என்பது பௌத்தர்கள் பூமி இங்கு மற்ற இனங்களிற்கு வாழ்வியல் உரிமையுடன் வாழ்வதற்கு எதுவித அந்தஸ்தும் வழங்க முடியாது என்பதே அவர்களது சித்தாந்தம் ஆகும்.

இவ்வாறான மன நிலையில் உள்ளவர்களுடன் எவ்வாறு சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்?. கடந்த காலத்தில் ஏற்பட்ட மனக்கிலேசம் மறைந்து போவதற்கு ஏதுவான நிலை எப்போதுதான் காணப்படப்போகிறது.

இது இவ்வாறு இருக்க அரசாங்கம் தற்போது தமிழர் பகுதிகளில் இராணுவப்பிரிவில் வேலைவாய்ப்பு எனும் போலி விளம்பரத்துடன் இளையோரை இலக்கு வைக்கும் நடவடிக்கை தொடர்கிறது.

எமது இழைய சமுதாயம் கொள்கை கோட்பாடு இன்றி முன் வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. வேலையில்லா திண்டாட்டம் எவ்வளவுதான் வாட்டி வதைத்தாலும் தமிழ் மக்களை அழித்தவர்களுடன் இணைவது எவ்வளவு நியாயமானது

இவ்வாறுதான் காவல்துறைக்குப் போன தமிழர்களை ஜனாதிபதி அணிவகுப்பு மரியாதையில் இருந்து நீக்கியமையும் குறிப்பிடத்தக்கது எவ்வாறாக இருந்தாலும் இலங்கை சிங்களவருக்குத்தான் எனும் எழுதப்படாத வரைமுறை நியதியை விடுத்துள்ளனர். ஆகவே இம்முயற்சி அரசின் இனக்கலப்பு நிகழ்ச்சி நிரலில் அடையாளமே தவிர நல்லெண்ண முயற்சியல்ல தமிழர் பண்பாட்டியலை வேறருக்கும் முயற்சி என்பது மட்டுமே மறுக்க முடியாத உணமை. எத்தனை காலத்துக்குத்தான் அரசு தன்னுடைய போலி முகத்திற்கு வேலியிடப்போகிறது?

அது இந்த நூற்றாண்டிலும் நடைபெறக்கூடிய ஏது நிலை அறவே இல்லை என்பதே வரலாற்று உண்மை.

# த.தே.கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சி தலைவர் மீது தாக்குதல்



(கல்முனை)
த.தே.கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சி தலைவர் ஏ.அமிர்தலிங்கத்தின் வீட்டிற்கு இன்று அதிகாலையில் சென்ற திருக்கோவில் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். உதயகுமார், எதிர்க்கட்சி தலைவர் மீது தாக்குதல் நடாத்தியுள்ளார்.

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர், மட்டக்களப்பு கல்லாறு பிரதான வீதியில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபையின் எதிர்க்கட்சி தலைவர் அமிர்தலிங்கம் வீட்டிற்கு நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்று, மோட்டார் சைக்கிளின் ஒலியை எழுப்பியுள்ளார்.

இதனையடுத்து, எதிர்க்கட்சி தலைவர் வீட்டிற்கு வெளியில் வந்து கதவை திறந்தபோது திட்டமிடல் பணிப்பாளர், தன்னிடம் கல்முனை சிவில் சமூக அமைப்பின் சங்கர் என்பவர் தொடர்பாக பிழையாக கதைப்பதாகவும் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்டத்தில் என்ன நடைபெற்றது என வினவியபோது இருவருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க் கத்தையடுத்து திடீரென திட்டமிடல் பணிப்பாளர், எதிர்க்கட்சித் தலைவர் மீது தாக்குதல் நடாத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதலினால் முகம், கழுத்து, முதுகு, கை என்பன படுகாயமடைந்ததையடுத்து பெரியகல்லாறு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்க்கட்சி தலைவர் மரக்கறி வியாபாரம் செய்வதற்கு என்னிடமும் இன்னும் சிலரிடமும் பணம் வாங்கியுள்ளதாகவும் அந்த பணத்தை ஒன்றரை வருடங்களாகியும் திருப்பி தராத நிலையில், அவரின் வீட்டிற்கு சம்பவதினமான அதிகாலையில் சென்று பணத்தைகேட்டபோது என்னை அவர் அரசாங்கத்துக்கு தமிழர்களை விற்பவன் கல்முனையில் தமிழ் மக்கள் தூசிப்பதாகவும்,

தேவையற்ற விடயங்களை பேசியபோது இருவருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதையடுத்து, எதிர்க்கட்சி அவரின் வீட்டின் கதவின் பின்னால் இருந்த குடத்தால் என் மீது தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து அவர் மீது நான் தாக்குதல் நடாத்தினேன். இருந்தபோதும் எனக்கு பணத்தை திருப்பி கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தில் எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு நடந்துள்ளார் எனவும் தற்போது காயமடைந்த கைக்கு சிகிச்சை பெற்றுவருவதாக திருக்கோவில் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் உதயகுமார் தெரிவித்தார்.

இச் சம்பவங்கள் தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிசார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆப்கானில் கடத்தப்பட்ட கிறிஸ்தவ பாதிரியார் இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு தந்தவர்

இலங்கையில் நடந்த உள்நாட்டு போரினால் தமிழ்நாட்டுக்குச் சென்ற அகதிகளுக்கு மறுவாழ்வு கொடுத்த கிறிஸ்தவ பாதிரியாரான பிரேம்குமார் ஆப்கானிஸ்தானில் வைத்து கடத்தப்பட்டுள்ளார். சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டை அருகில் உள்ள வாடிவயல் பகுதியை சேர்ந்தவர் அந்தோனிசாமி பிள்ளை. இவரது மனைவி மரியதங்கம். இவர்கள் 2 பேரும் தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள். இவர்களது மகன்கள் தனிஸ்லாஸ், அலெக்சிஸ் பிரேம்குமார் (வயது 47). தனிஸ்லாஸ் தேவகோட்டை யூனியன் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

1967ம் ஆண்டு பிறந்த பிரேம்குமார் தனது கல்லூரி படிப்புக்கு பிறகு 1984ம் ஆண்டு முதல் 86ம் ஆண்டு வரை திண்டுக்கல் பெஸ்கி இல்லத்தில் பயிற்சி பெற்றார்.

அப்போது இலங்கையில் நடந்த உள்நாட்டு போரினால் ஏராளமானோர் இராமநாதபுரத்துக்கு அகதிகளாக வந்தனர். அவர்கள் மறுவாழ்வுக்காக பிரேம்குமார் பாடுபட்டார். இதனையடுத்து கொடைக்கானலில் பழங்குடியின மக்கள் மேம்பாட்டுக்காக சிறிது காலம் சேவை ஆற்றினார்.

சமூக சேவையில் ஆர்வம் கொண்ட இவர் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்கானிஸ்தானில் உள்நாட்டு போர் ஏற்பட்டபோது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகவும் குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதற்காகவும் மதுரை தொண்டு நிறுவனத்தின் மூலம் அங்கு சென்றார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனரமைப்பு பணிகள் செய்து வந்தபோது தீவிரவாதிகளால் பலமுறை எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் அதனையும் மீறி அவர் தனது சமூக சேவையை தொடர்ந்து வந்த நிலையில் கடந்த மாதம் 23ந்தேதி பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டார்.

இதுகுறித்த தகவல் திண்டுக்கல்லில் உள்ள பெஸ்கி இல்ல பாதிரியார்களுக்கு தூதரகம் மூலம் தகவல் தரப்பட்டுள்ளது.

இதனை கேள்விப்பட்டதும் அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். கடத்தப்பட்ட பாதிரியார் பிரேம்குமார் சமூக சேவையில் ஆர்வம் கொண்டவர்.

பயங்கரவாதத்தால் பல நாடுகள் பாதிக்கப்பட்டு வருவதை அறிந்த அவர் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவது மற்றும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவருக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்து ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற விரும்பினார். இவர் கடத்தப்பட்ட சம்பவம் திண்டுக்கல் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதுகுறித்து திண்டுக்கல்லில் உள்ள பாதிரியார்கள் கூறுகையில், பிரேம்குமார் நல்ல முறையில் திரும்ப நாங்கள் அனைவரும் பிரார்த்தனை செய்து வருகிறோம் என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த.தே.கூட்டமைப்பின் மதிநுட்பமான தீர்க்கதரிசனமான தவிசாளர்தெரிவு! மாவைக்கு நன்றிக்கடிதம்



காரைதீவு பிரதேசசபை வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயத்தை ஏற்படுத்திவிடக் கூடாதென்பதனைக் கருத்திற்கொண்டு காலத்திற்குப பொருத்தமான மதிநுட்பத்துடன் கூடிய தீர்க்கதரிசனமான தெரிவினூடாக இளம் தலைமுறையிலிருந்து ஒருவரை தவிசாளராக நியமித்தமைக்காக முத்தமிழ் வித்தகன் விபுலானந்தன் பிறந்த காரைதீவு மண் சார்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவிற்கு த.தே.கூட்டமைப்பின் காரைதீவுப் பிரதேச முன்னாள் உப தவிசாளரும் அமைச்சர் தயாரத்னாவின் அரசியல் விவகார இணைப்பாளருமான பொறியியலாளர் வீரகத்தி கிருஸ்ணமூர்த்தி அனுப்பி வைத்துள்ள நன்றிச் செய்தி மடலில் தெரிவித்துள்ளார்.

அவரது நன்றிக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

என்றும் தமிழுணர்வுடன் வாழ்கின்ற காரைதீவு மண் தமிழ்த் தேசியத்தை நேசித்து வந்திருக்கிறது. கன்னிப் பிரதேச சபையை நாம் சிறப்பாக வழிநடாத்தி வடக்கு கிழக்கில் முதல்நிலை சபையாக கொண்டுவந்தோம்.

தமிழரசுக்கட்சி சார்பில் நாம் போட்டியிட்டு ஜீவராசாவும் உபதவிசாளராக நானும் மேலும் இரு உறுப்பினர்களும் தெரிவாகி மக்கள் சேவை செய்துவந்தோம்.

வருடாந்தம் கல்வியில் சாதனை செய்த மாணவர்களை, நாதஸ்வரம் மேளதாளத்துடன் ஊர்வலம் ஊடாக அழைத்து வந்து வித்திய சாஹித்திய விழாவை நடாத்தி கல்வியை ஊக்குவித்தோம். இதனால் சாலினி போன்ற பல சாதனையாளர்கள் உருவாகினார்கள்.

பிரதேசசபைக்கான நிரந்தர அலுவலகம் நூலகம் சந்தை ஆயுர்வேத மருந்தகம் என பலதரப்பட்ட மக்கள் சேவைகளை செய்துள்ளோம். மேலும் திண்ம கழிவுமுகாமைத்துவ செயற்பாடு மற்றும் கலாசார மண்டபம் பிரதான நிரந்தர நிருவாககட்டடம் போன்றன கூட எமது சேவைக் காலத்தில் ஆரம்பிக்கப் பட்டனவே.

எந்தவொரு ஊழலும் இடம் பெறவில்லை. எமது நிதியை வழங்கியே பாராட்டு விழாக்களையும் ஏனைய செயற்பாடுகளையும் ஆற்றினோம்.

இறுதி தேர்தலில் வேட்பாளர் தெரிவில் ஓரநீதி காட்டப்பட்டதனால் நாம் சற்று ஒதுங்கினோம். ஆனால் மக்கள் சேவையை பல கோணங்களில் ஆற்றிவருகின்றோம்.

நிற்க தற்போதைய சபையில் 04 உறுப்பினர்களில் மூவர் கூட்டமைப்பினர் என்பதனை அறிவீர்கள். இந்நிலையில் பட்ஜெட் விவகாரத்தால் எழுந்த அசாதாரண நிலைமையால் சிலகாலம் சபை தவிசாளரின்றி செயற்பட்டதை அறிவோம்.

எனினும் பதறாத காரியம் சிதறாது என்பதற்கிணங்க இளம் தலைமுறையிலிருந்து அதுவும் பட்டதாரி ஆசிரியரான கோபிகாந்தை தவிசாளராக தெரிவுசெய்ததன் மூலம் கூட்டமைப்பு நீதியாகவும் நியாயமாகவும் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு தீர்க்கமான முடிவை எடுத்துள்ளதெனலாம். இதனை எமது மக்கள் பெரிதும் வரவேற்கிறார்கள்.

கட்சிக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தும் எவரும் கட்சி விசுவாசியாக தமிழ் தேசிய உணர்வாளனாக இருக்கமுடியாது. கடந்த 3வருட காலத்தில் சபையில் என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாத சூழ்நிலை இருந்தது.

இனிமேல் அதற்கு இடமளிக்காது மிகவும் வெளிப்படைத் தன்மைமிக்க ஊழலற்ற நிருவாகத்தின் மூலம் சிறந்த மக்கள் சேவை செய்யவேண்டுமென்பதே எமது அவா.

நான் என்றும் பதவிக்கு ஆசைப் பட்டவனல்ல மாறாக அமைதியாக மக்கள் சேவை செய்யவிரும்புகின்றவன் என்பதையும் தாழ்மையாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

மீண்டுமொருமுறை எமது மண் சார்பாக தங்களுக்கும் கூட்டமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் அரசாங்கம் செயற்படுகின்றது!- பிரதமர்



பௌத்த மதத்தை பாதுகாத்து போசிப்பதற்கு அர்ப்பணிப்புடன் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.
இலங்கையில் ஐந்து மதங்களை வழிபடும் நான்கு இன மக்கள் ஒற்றுமையுடனும் சகவாழ்வுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

உலகின் வேறு எந்த நாட்டிலும் இவ்வாறான ஓர் சகவாழ்வினை பார்க்க முடியாது. அநேக நாடுகளில் இன, மத மற்றும் மொழி பிரிவினைகள் காணப்படுகின்றன.

இலங்கையில் நிலவும் சமாதானத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலி பயங்கரவாதத்தை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகள் காரணமாகவே சிங்கள இனம் இன்றைக்கும் தலைதூக்கியுள்ளது.

மெய்யான பௌத்தர் என்ற ரீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் பௌத்த மதத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

புத்தரின் வழிகாட்டல்களை பின்பற்றும் எவரும் பிழையான வழியில் செல்ல மாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரந்தலாவை பௌத்த பிக்குகள் கொலை தொடர்பான நினைவு நிகழ்வுகளில் பங்கேற்று நேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## ஜோன்ஸ்டனின் செயலாளரை ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவு



வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் இணைப்பு செயலாளரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொம்பனித்தெரு பொலிஸாரின் அறிக்கைக்கு இணங்க எதிர்வரும் 30 ஆம் திகதி அவரை மன்றில் ஆஜராகுமாறு நேற்று உத்தரவிடப்பட்டது.

2013 ஜூலை 31 ல் இடம்பெற்ற சதோஸ விற்பனை நிலைய எரியூட்டல் சம்பவம் தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் கைவிரல் அடையாளத்தை தருமாறு குறித்த செயலாளரிடம் கோரப்பட்ட போதிலும் அவர் அதனை இதுவரை வழங்கவில்லை என்று பொலிஸார் மன்றில் அறிவித்தனர்.

## பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் பிரதி அமைச்சரிடம் விசாரணை

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் குறித்து பிரதி அமைச்சர் ஹேமால் குணசேகரவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் மோட்டார் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றி வரும் சுமிந்த சமான் என்ற பொலிஸ் கான்டஸ்டபிள் மீது அண்மையில் தாக்குதல் நடத்தப பட்டதுடன், அவரது மோட்டார் வாகனமும் தீயிட்டு கொளுத்தப்பட்டது.

இந்த சம்பவத்துடன் பிரதி அமைச்சருக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர், குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை அச்சுறுத்திய காட்சிகள் சி.சி.ரி.வி. கமெராவில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் பிரதி அமைச்சரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் சம்பவம் குறித்து நான்கு பொலிஸ் விசாரணைக் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

## குவைத் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம்

குவைத்தின் பிரதி சபாநாயகர் முபாரக் அல் குரய்னிஜ் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் மாலை நாட்டுக்கு வந்தடைந்ததாக வெளிவிவகார அமைச்சு அறிவித் துள்ளது.

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடியின் அழைப்பின் பேரில் இந்தப் பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இந்தப் பிரதிநிதிகள் குழுவினர் 4ம் திகதி வரையில் இலங்கையில் தங்கியிருப்பார்கள்.

குவைத் பிரதிநிதிகள், நாடாளுமன்றிற்கு சென்று அதன் செயற்பாடுகளை பார்வையிடுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா உள்ளிட்ட பலரை இந்தப் பிரதிநிதிகள் சந்திக்க உள்ளனர்.

இரு தரப்பு உறவுகள், நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பிரதிநிதிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது.

## இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பேத்தாழை கிரமத்தில் 40 வீடுகள் அமைக்க நடவடிக்கை- சி.சந்திரகாந்தன்



இந்திய வீடமைப்புத் திட்டம் மூலமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பேத்தாழை கிரமத்தில் வீடுகள் இல்லாமல் வாழ்கின்ற வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்களுக்கு 40 வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக ஜனாதிபதியில் ஆலோசகரும், கிழக்கு மாகாண சபை உறுப்பிருமான சி.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இந்திய வீடமைப்பு திட்டம் தொடர்பாக பயனிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் வாழைச்சேனை பேத்தாழை குகநேசன் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சந்திரகாந்தன் மேலும் குறிப்பிடுகையில்,

இதற்காக தற்போது 100 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளது. பயனாளிகளின் தெரிவு தொடர்பான தீர்மானத்தை இந்திய வீடமைப்புத் திட்ட உயர் மட்டக் குழுவினர் கிடைத்த விண்ணப்பங்களை பரிசீலனை செய்து முடிவெடுப்பார்கள்.

இவர்களின் தெரிவு சரியான தெரிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இறுதித் தீர்மானமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய பொறுப்பு உங்களிடம் உள்ளது. இவர்களுக்கு இடைஞ்சல் விளைவிக்க கூடாதெனவும் கேட்டுக் கொண்டார். பயனாளிகள் தெரிவில் பொருத்தமானவர்களை தெரிவு செய்வதே இவர்களின் கடமையாகுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு வாழைச்சேனை பிரதேச செயலாளர் தெட்சணகௌரி தினேஸ், திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.தேவாகரன் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மா மீதான இறக்குமதி வரி 25 ரூபாவால் அதிகரிப்பு
### மக்களுக்கு பாதிப்பில்லை- நிதியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)
பால்மாவுக்கான இறக்குமதி வரி கிலோ ஒன்றுக்கு 25 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி, திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது. நேற்றுமுன் நள்ளிரவிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்த அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இதுவரை 57 ரூபாவாக இருந்த இறக்குமதி வரி இனி 82 ரூபாவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இறக்குமதி வரி அதிகரிப்பை அடுத்து பால்மாவுக்கான விலை அதிகரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பால்மா ஒரு கிலோவுக்கான இறக்குமதி வரி 57 ரூபாயில் இருந்து 87 ரூபாவாக அதிகரித்த போதும், பால்மாவுக்கான விலை குறைவடையவோ, அதிகரிக்கவோ போவதில்லை என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

உலக சந்தையில் பால் மாக்களின் விலை குறைவடைந்துள்ளதால், அவற்றை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கான சலுகைகள் மட்டுமே இதனால் குறைவடைந்துள்ளதாக அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் சந்தையில் பால்மா விலைகளை அதிகரிக்க நிறுவனங்களுக்கு அனுமதி இல்லை எனினும் நிறுவனங்களின் விருப்பத்தின் படி பால் மா விலைகளை குறைக்க முடியும் என நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# காதல் தோல்வியால் தற்கொலை செய்ய முயற்சித்த சிறுவன்

காதல் தோல்வி காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் காட்டுப் பகுதிக்கு சென்ற மாணவர் ஒருவர், தூக்கிட நினைத்த மரத்தின் கீழ் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது உறவினர்கள் அவரை கண்டு பிடித்துள்ளனர்.

15 வயது பாடசாலை மாணவர் ஒருவரே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நொச்சியாகம பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.
நொச்சியாகம கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலையொன்றில் குறித்த மாணவர் கல்வி கற்று வருகின்றார்.

குறித்த மாணவர் அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவி ஒருவருடன் காதல் தொடர்பினைப் பேணி வந்துள்ளார்.
ஓராண்டு காலம் நீடித்த இந்த காதல் உறவு அண்மையில் முறிவடைந்ததாகவும், இதனால் மாணவர் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
காதல் தோல்வியை தாங்கிக் கொள்ள முடியாத 15 வயது மாணவர், காட்டுப் பகுதிக்கு சென்று மரமொன்றில் தூக்கிட்டு உயிரை விட திட்டமிட்டுள்ளார்.

இதன்படி கயிறு ஒன்றை எடுத்துக் கொண்டு சென்ற மாணவர், இறுதி நேரத்தில் எண்ணத்தை மாற்றிக் கொண்டு ஆழ்ந்து உறங்கிவிட்டதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த முதலாம் திகதி காணாமல் போன மாணவரை பெற்றோரும் உறவினர்களும் பல இடங்களிலும் தேடி இறுதியாக தனுமடலாவ காட்டுப்பகுதியில் உள்ள மரமொன்றின் கீழ் உறங்கிக் கொண்டிருந்த போது கண்டு பிடித்துள்ளனர்.

சுமார் ஒரு நாள் உணவு எதுவுமின்றி மாணவர் இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கொல்களம் அகற்றப்படுமா? காரைதீவு மக்கள் கேள்வி



(காரைதீவு)
அம்பாறை மாவட்டத்தில் காரைதீவுப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மாவடிப்பள்ளி சின்னப் பாலமருகேயுள்ள மாடு அறுக்கும் கொல்களம் அகற்றப்படுமா என்று பொதுமக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

பிரதான வீதியிலுள்ள இக்கொல்களத்தால் எந்நேரமும் துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது. அசுத்தம் நிறைந்து காணப்படுவதால் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. சில வேளைகளில் இந்நாய்கள் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படுகின்றன.

அதுமட்டுமல்ல, மாடுகளின் எச்சசொச்சங்களை சுவைப்பதற்கு அருகிலுள்ள ஆற்றிலிருந்து முதலைகள் படையெடுக்கின்றன. இதனால் அங்கு ஸ்நானம் செய்யவருவோரும் வாகனங்கள் சுத்தம் செய்யவருவோரும் அஞ்சுகின்றனர். தோல் நோய்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்பேற்படுகிறது.
ஒரே துர்நாற்றம் வீசுவதால் அவ்விடத்தால் போவோர் முகஞ்சுழித்தவண்ணம் செல்லவேண்டி நேரிடுகிறது. வெள்ள காலத்தில் துர்நாற்றம் அதிகமாகும்.

எனவே இக்கொல்களனை அவ்விடத்திலிருந்து அகற்றி வேறொரு இடத்தில் அமைத்துதவுமா காரைதீவு பிரதேச சபையின் புதிய நிருவாகம் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## கல்முனையில் 48 பயணிகளுடன் ஆற்றுக்குள் பாய்ந்த பஸ்

(கல்முனை)
கல்முனை நகரிலிருந்து 48 பயணிகளுடன் சவளக்கடை ஊடாக 11ம் கொலனி நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், வேகக்கட்டுப்பாட்டை இழந்து கிட்டங்கி ஆற்றுக்குள் பாய்ந்துள்ளது.

இன்று காலை இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் பயணிகள் அனைவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

கல்முனை நகரிலிருந்து நாவிதன்வெளிப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர் களின் நலன்கருதி இந்த பஸ் சேவை இடம் பெறுகின்றது.
ஆசிரியர்களுடனும் பொது மக்களுடனும் கிட்டங்கி வீதியால் வந்து கொண்டி ருந்தபோது, பஸ் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் பாய்ந்துள்ளது. சாரதியின் சாமர்த்தியத்தால் பஸ் குடை சாயாது, பாரிய விபத்திலிருந்து காப்பாற்றி யுள்ளார்.

இதனையடுத்து, குறித்த இடத்திற்கு வருகை தந்த சவளக்கடைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# வடமராட்சியிலும் மக்களின் காணியை இராணுவம் சுவீகரிக்க முயற்சி! உரிமையாளர்கள் எதிர்ப்பு

(பருத்துறை)
பருத்துறை அல்வாய் வடக்கு கிராமத்தில் புலிகள் பயன்படுத்திய நிலம் என்ற போர்வையில் மக்களுக்குச் சொந்தமான நிலத்தை படையினர் ஆக்கிரமிக்க நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் நில உரிமையாளர்கள் இதற்கு முழுமையான மறுப்பு தெரிவித்து வருவதுடன் நில்த்தை மீண்டும் தமக்கு வழங்கவேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கடந்த 1990ம் ஆண்டு தொடக்கம் 1995ம் ஆண்டுவரையில் அல்வாய் வடக்கு கிராமத்தில் சுமார் 30 குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் 128 பரப்பு காணியில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிலைகொண்டிருந்தனர்.

இந்நிலை யில் 1995ம் ஆண்டு யாழ்.குடாநாடு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதன் பின்னர் அந்தப் பகுதியில் புலிகள் இருந்தனர் என்ற போர்வையில் படையினர் அந்த நிலத்தை ஆக்கிரமித்ததுடன், அங்கிருந்த விடுதலைப் புலிகளின் பதுங்குழி ஒன்றினையும் அழித்துவிட்டு கடந்த 4வருடங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் தமது முகாமை அமைத்துக் கொண்டனர்.

இந்நிலையில் மக்கள் தமது நிலத்தை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்து வந்த நிலையில் கடந்த வருடம் குறித்த காணியை சுவீகரிக்கப் போவதாக படையினர் நில உரிமையாளர்களுக்கு கடிதம் அனுப்பியிருந்தனர்.
இதனையடுத்து கடந்த 28ம் திகதி அந்தப் பகுதிக்கு நில அளவையாளர்களை அழைத்து வந்த படையினர் நிலத்தை அளக்க முற்பட்டிருந்த நிலையில் பொதுமக்கள் கூடி கடுமையான எதிர்ப்பினை தெரிவித்திருந்தனர். இதனையடுத்து அந்நடவடிக்கை கைவிடப்பட்டது.

இந்நிலையில் இன்றைய தினம் குறித்த பகுதிக்கு நில அளவையாளர்கள் மீண்டும் வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அப்பகுதியில் நில உரிமையாளர்கள் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர்கள் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் சிவயோகம் ஆகியோர் கூடினர்.
எனினும் நில அளவையாளர்கள் அப் பகுதிக்கு வராமல் குறித்த நில அளவைத் திட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்நிலையில் கட ந்த 19வருடங்களாக இடம்பெயர்ந்து மாற்றிடங்களில் வாழும் மக்கள், தமக்கு அந்த நிலம் மீள வழங்கப்படவேண்டும் நிலத்தை படையினருக்கு வழங்க முடியாதென உறுதியாக கூறி வருவதுடன், குறித்த நில ஆக்கிரமிப்பினை எதிர்த்து நீதிமன்றம் செல்லவுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

அதற்கான ஒழுங்கமைப்புக்களையும் சட்டத்தரணிகள் உதவியினையும் தாம் பெற்றுக் கொடுப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளனர்.

## இராணுவ உயர் அதிகாரிகள் பயணம் செய்த வான் மோதி மாணவி பலி



மட்டக்களப்பில் இராணுவ உயரதிகாரிகள் பயணம் செய்த வான் மோதி 7 வயது மாணவியொருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு கதிரவெளியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

புத்தளம் பிரதேசத்தில் இருந்து வெலிஓயா திருகோணமலை நோக்கி இராணுவ உயர்அதிகாரிகள் பயணம் செய்த வாகனம்

பாடசாலை விட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்த மாணவியை மோதியதினால் இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கதிரவெளி கனிஸ்ட வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ம.பொபித்தா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


சடலம் தற்போது வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வாகரை பொலிசார் மேற்கொண்டு வருவதாக மேலும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புது வரவுகள் பற்றிய தகவல்களை வெளியிட்டது Asus




தரம் வாய்ந்த இலத்திரனியல் சாதனங்களை தயாரிக்கும் நிறுவனங் களுள் ஒன்றான Asus ஆனது MeMO Pad 7 மற்றும் 8 எனும் இருவகையான சாதனங்களை உருவாக்கியுள்ளது.
64-bit Intel Atom Processors இனை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் இச்சாதனங்கள் தொடர்பான அறிவித்தலை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இதன்படி யுளபள MeMO Pad 7 ஆனது 7 அங்குல அளவு, 1280 x 800 Pixel Resolution உடைய தொடுதிரை யினையும், 1.86GHz வேகத்தில் செயற்படக்கூடிய 64-bit Intel Atom Z3745 Quad-Core Processor இனையும் கொண்டுள்ளது.

இவற்றுடன் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றுடன் 16GB சேமிப்பு நினைவகமும் தரப்பட்டுள்ளது.

Asus MeMO Pad 8 ஆனது 8 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினையும், 2.3GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய 64-bit Intel Atom Z3580 Quad-Core Processor இனையும் உள்ளடக்கியுள்ளது.

## இணையத்தின் இன்றைய நிலைக்கு யார் காரணம்?




இணையம் இல்லை என்றால் இந்த உலகமே இல்லை என்ற நிலைக்கு வந்துவிட்டோம் என்று தான் சொல்ல வேண்டும்.
நம் வாழ்க்கையோடு இணைந்துவிட்ட இணையத்தின் இன்றைய நிலைக்குப் பலர் காரணமாக இருந்துள்ளனர்.

**1. மார்க் ஆண்ட்ரீசன்**(Marc Andreesen)

ஆழளயனை என்னும் பிரவுசரை உருவாக்கியவர். முதல் நிலையில், இணையத்தினை மக்களிடம் பரவலாகக் கொண்டு சென்றதில், இந்த பிரவுசருக்கு இடம் உண்டு.

பின்னால் நெட்ஸ்கேப் நேவிகேட்டர் என்ற இணைய பிரவுசரை உருவாக்குவதில் இவர் அதிகம் துணை புரிந்தார்.

1990ஆம் ஆண்டு காலகட்டத்தில் இணையப் பயன்பாடு தொடர்ந்து உயர்ந்த போது, இந்த பிரவுசரின் இடமும் முதல் இடத்தில் இருந்தது.

**2. விண்ட் செர்ப்**(Vint Cerf)

இணையத்தை உருவாக்கிய தந்தை என, Bob Kahnஎன்பவரோடு சேர்த்து அழைக்கப்படுபவர் .விண்ட் செர்ப்.

TCP/IP தொழில் நுட்பம் வளர்ச்சி அடைய இவருடைய பணி அதிகம் உதவியது.

இவர் அமைத்த MCI அயடை சிஸ்டம் தான் இன்றைய மின்னஞ்சல்களுக்கு முன்னோடியாய் அமைந்தது.

இணைய பெயர்களை வரையறை செய்திடும் ICANN எனச் சுருக்கமாக அழைக்கப்படும் Internet Corporation for Assigned Names and Numbers என்னும் அமைப்பினை உருவாக்கிய முன்னோடி இவர்.

**3. இராபர்ட் பாப் கான்**(Robert "Bob" Kahn)

இவருடைய தோழரும் உடன் பணியாற்றியவருமான விண்ட் செர்ப் போல இவரும் இணையத்தை உருவாக்கிய தந்தை என அழைக்கப்படுகிறார்.

TCP/IP தொழில் நுட்பம் வளர்ச்சி அடைய இவருடைய பணியும் அதிகம் உதவியது.

இவர் ஆய்வுகளை மேற்கொள்ள உதவியாக Corporation 'for National Research Initiatives (CNRI) என்னும் அமைப்பினை உருவாக்கினார். இந்த அமைப்பு நெட்வொர்க் தொழில் நுட்பத்தில் அதிகக் கவனம் செலுத்தியது.

**4. ஜிம் கிம்சி**(Jim Kimsey)

இணைய சேவை வழங்குவதில் உலகிற்கே முன்னோடியாக விளங்கும் AOL நிறுவனத்தை நிறுவி, அதன் தலைமை நிர்வாகியாகப் பணியாற் றியவர்.

ஒரு சமயம் இந்நிறுவனத்தின் இணைய சேவையைப் பெற்றவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியாக இருந்தது.

இணையத்தில் ஒருவருக்கொருவர் நேரடியாக தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் iவெநசநெவ உாயவ மற்றும் iளெவயவெ அநளளயபநை இவர் நிறுவனத்தால் பிரபலமாகியது.

மேலும் தங்களுக்கேற்ற வகையில் இணைய தளத்தினை உருவாக்கிய வழிகளும் இவர் தந்தவையே.

## நிலவில் தரையிறங்கும் முதல் வீடு



சுவீடன் கலைஞர் ஒருவர் நிலவில் தரையிறங்கியதுடன் சுயமாக வடிவமைத்து கொள்ளும் வீட்டை உருவாக்கி வருகின்றார்.

கடந்த 2003ம் ஆண்டில் சுவீடன் நாட்டை சேர்ந்த கலைஞரும் தொழிலதிபருமான மைக்கேல் ஜென்பர்க் என்ற நபர் நிலவில் வீடு அமைக்கும் பணியை தொடங்கி யுள்ளார்.

பலரால் நிதியுதிவி பெற்றப்பட்டு வந்த இந்த பணி கடந்த 2010ம் ஆண்டில் பொருளாரதார பிரச்சனையின் காரண மாக பணியை தொடந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

ஆனால் தற்போது மீண்டும் தொடரப்பட்டுள்ள இந்த வீட்டின் உருவாக்கம் கிட்டத்தட்ட 75 சதவிகிதம் முடிந்துவிட்டதாக கூறப் படுகின்றது.

கார்பன் கட்டமைப்பின் மீது இதற்கென தயாரிக்கப்பட்ட சிறப்பு துணி கொண்டு இந்த வீடு உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் நிலவில் சென்று இறங்கி யவுடன் வாயுவினால் இந்த கூடாரத்தை நிரப்பிய பின்னர் சில நிமிடங்களில் இந்த வீட்டின் கட்டமைப்பு சுயமாக உருவாகிவிடும்.

சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் செய்யப்பட்டுவரும் இந்த வீடானது சுவீடன் நாட்டில் காணப்படும் சிறிய குடிசை வீட்டை ஒத்திருக்கும்.

இந்த வீடு மூன்றுக்கு இரண்டு மீட்டர் பரப்பளவும், 2.5 மீ உயரமும் கொண்ட இந்த வீடு வளர்ந்த ஒரு மனிதன் வசிப்பதற்குப் போதுமான இடத்தை கொண்டிருக்கும்.

இதற்காக சுவிடனின் விண்வெளி பொறியாளர்கள் பல ஆண்டுகளாய் தொடர்ந்து ஆய்வு நடத்தி தங்களது கனவினை நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாய் உள்ளனர்.

நாசாவையும் தங்களின் தொழில்முறை பங்குதாரர்களாகக் கொண்ட அஸ்ட்ரோபோடிக் என்ற அமெரிக்க விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் இந்த வீட்டை நிலவுக்கு எடுத்துச் செல்ல இணைந்துள்ளது மட்டு மல்லாமல் அடுத்த வருடம் அக்டோபர் மாதம் இந்த பயணம் திட்டமிடப்பட்டுள்ளது.

## புதிய அம்சங்களுடன் மீண்டும் WhatsApp




Windows Phone இயங்குதளங்களில் செயற்படக்கூடிய WhatsApp அப்பிளிக்கேசன் சில வாரங்களுக்கு முன்னர் Windows Phone Store தளத்திலிருந்து அதிரடியாக நீக்கப் பட்டிருந்தது.
இந்நிலையில் தற்போது பல புதிய அம்சங்களுடன் மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
2.11.490 பதிப்பாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த அப்பிளிக் கேசனில் சட் செய்யும்போது பின்னணி புகைப்படத்தினை மாற்றி அமைக்கும் வசதி தரப்பட்டுள்ளது.
இவற்றுடன் பின்வரும் புதிய அம்சங்களும் உள்ளடக் கப்பட்டுள்ளன.

**Broadcast lists**

**Privacy settings (settings > account > privacy)**

**Media auto-download settings (settings > chat settings > media autodownload)**

**Custom notification tones (Windows Phone 8 Update 3 required)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் சாட்சியமாக நான் இருக்கிறேன்!

**நீங்கள், இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் (Journalists for Democracy in Sri Lanka- JDS) என்ற உங்கள் அமைப்பினர், நண்பர்கள் ஆகியோர் பங்களிப்பு இல்லாமல் சர்வதேசச் சமூகத்தையே உலுக்கிய கைப்பேசி வீடியோவில் எடுக்கப்பட்ட படுகொலைக் காட்சிகள் வெளிச்சத்துக்கு வந்திருக்கமாட்டாது. இந்த வீடியோ படங்களை சானல் 4 தொலைக்காட்சிக்குத்தான் வழங்க வேண்டுமென எப்படித் தீர்மானித்தீர்கள்?**

முதலில் நான் ஒன்றைக் கூற வேண்டும். இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பயங்கரமான படுகொலைகளும் குற்றச் செயல்களும் ரகசியமாக நடந்தவையல்ல. சர்வதேச அதிகார சக்திகளைப் பொறுத்தவரை இவ்வாறான இன அழிப்பு நடவடிக்கை இடம்பெறப் போகிறது என்பதை ஏற்கனவே அவர்கள் அறிந்திருந்தார்கள். இந்தப் படுகொலைக் களத்தின் ஆர்வமிக்க பார்வையாளர்களாக ஏராளமானோர் தொலை தூரத்தில் இருந்தார்கள். இந்த உண்மை, ஐ. நா. அவையின் மனிதாபிமானச் செயல்பாடுகளுக்கான தலைவர் சர் ஜோன் ஹோல்ம்ஸ் சானல் 4இல் வெளிப்படையாகக் கூறிய ஒரு கருத்தில் மிக நன்றாகவே பிரதிபலித்தது:

சர்வதேசச் சமூகத்திலிருந்து யாராவது தடுத்து நிறுத்துவார்கள் என்று இலங்கை அரசு ஒருபோதும் நம்பவில்லை. அதன் கணிப்பு சரியானதே. ஆனால் சில ராஜதந்திர ஆட்டங்கள் இதைச் சுற்றி நடந்தன. ஆகவே நீண்ட காலமாக நடைபெற்ற இந்த உள்நாட்டுப் போர் ரத்தக்களரியில் முடிந்தமை வழமையான, தர்க்கரீதியானது என நாம் பார்க்க முடியாது. மாறாகக், கள்ளத்தனமாகக் கணக்கிடப்பட்ட சர்வதேச அரசியல் விளையாட்டின் விளைவாகவே பார்க்கப்பட வேண்டும்.

உலகமெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், பொலிசார் அடித்தபோதும் துன்புறுத்தியபோதும் இழுத்துக் கைது செய்தபோதும், அந்தந்த நாடுகளின் வீதிகளில் பல மாதங்களாக நின்றனர். ஓலமெழுப்பினர். விம்மினர். கடுங்குளிரையும் பொருட்படுத்தாது எதிர்த்து நின்றனர். பொதுமக்கள் சதுக்கங்களைக் கைப்பற்றியிருந்தனர். விரைவு நெடுஞ் சாலைகளை மறித்தனர். பலர் தீக்குளித்தனர். இவை எங்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் மைய நீரோட்ட ஊடகங்கள் இவற்றுக்கு எத்தகைய முக்கியத்துவமும் வழங்கவில்லை. இனப் படுகொலை இடம்பெறுவதைப் பற்றி உணர்வுபூர்வமான செய்திகள் எதையும் வெளியிடவில்லை.

இப்படியான சூழ்நிலையில்தான் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்ற முதலாவது வீடியோ முக்கியத்துவம் பெறுகிறது. இது வெளிவந்தமை அன்றைய சூழலை ஆட்டங்காணவைத்தது. இலங்கை அரசாங் கத்தைத் தவிர வேறு எவருக்கும் அந்த வீடியோவைப் பொய்யெனச் சொல்லிப் புறம் தள்ளிவிடுவதற்கான துணிவு இருக்கவில்லை. இலங்கை அரசாங்கம் வழமைபோலவே இதையும் மறுத்தது. இப்படி மறுப்பது என்பது அவர்களுக்கு ஒரு சடங்கு மாதிரி. இந்த வீடியோ பிரதிகள் கிடைத்தபோது உண்மையிலேயே என்ன செய்வது என எங்களுக்குத் தெரியவில்லை.

இவற்றை வெளியிடுவதற்குச் சரியான, பொருத்தமான வழியைக் கண்டுபிடிக்கும்வரை அவை இரண்டு கிழமைகளாக எங்களிடமே இருந்தன. இக்காலங்களில் சானல் 4 தொலைக்காட்சியுடன் எமக்கு எந்தவிதமான உறவும் இருக்கவில்லை. ஆனால் இலங்கை ராணுவத்தால் நடாத்தப்படுகின்ற அகதிகள் முகாம்களுக்குள் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தொடர்பான ரகசியப் புலனாய்வு அறிக்கை ஒன்றை வெளியிட முயன்ற சானல் 4இன் பத்திரிகையாளர் ஒருவர் நாடுகடத்தப்பட்டிருந்தார் என்பதை நாம் அறிந்திருந்தோம்.

ஆகவே இந்த வீடியோவைச் சர்வதேச மனித உரிமைகள் குழுக்களுக்கும் ஐ.நா. அங்கங்களுக்கும் அனுப்புவதோடு நின்றுவிடாமல் அந்தக் குறிப்பிட்ட பத்திரிகையாளரையும் தொடர்புகொள்ள முயன்றோம். ஏனெனில் அப்படியான ஒருவர்தான் இந்த ஆதாரத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய




நிலையில் இருப்பார் என்பதை உணர்ந திருந்தோம். ஆனால் அவர் அங்கு இருக்கவில்லை. ஆனாலும் சானல் 4 தொலைக்காட்சியின் வெளிநாடுகளுக்கான செய்திப் பிரிவினரோடு தொடர்புகொண்டு இதன் பின்னணியை விளக்கினோம். இவ்வாறுதான் சானல் 4 தொலைக்காட்சியுடனான உறவுக்கு இறுதியாக வந்தடைந்தோம்.

**நீங்கள் இலங்கையின் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் அமைப்பின் முக்கியமான ஒரு அங்கத்தவர். இந்த அமைப்பு எப்படி உருவானது என்பதைப் பற்றி எங்களுக்குக் கூறுவீர்களா?**

இப்பொழுது தலைமறைவாக வாழும் பல பத்திரிகையாளர்கள் மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சி ஒன்றே இந்த அமைப்பின் உருவாக்கம். இதன் முதலாம் கூட்டம் 2009ஆம் ஆண்டு ஜூலை மாதம் பெர்லின் நகரில் நடைபெற்றது. இதில் பதினைந்து தமிழ், சிங்களப் பத்திரிகை யாளர்களும் மனித உரிமைச் செயல் பாட்டாளர்களும் கலந்துகொண்டனர். நீண்ட நேர அலுப்பான விவாதங்கள் நம்மை ஒரு முடிவுக்கு கொண்டுவந்து நிறுத்தின. கூட்டான குழுவொன்றை உருவாக்குவதற்கான தேவை யையும் முக்கியத்துவத்தையும் நாம் உணர்வதற்கு இந்த விவாதங்கள் நம்மை நிர்ப்பந்தித்தன.

அதாவது நாம் தனித்தனியாகச் செய்யும் வேலைகளைக் குழுவொன்றினூடாக ஒழுங்க மைக்கப்பட்ட வகையில் செயல் படுத்துவதற்குப் பயன்படுத்தலாம் என்பதையும் உணர்ந்தோம். ஆனால் பிற்காலங்களில் நாம் முன்னெடுத்த செயல்பாடுகள் நமது குழுவின் ஆரம்ப நோக்கங்களை மேலும் தீவிரமாக மாற்றின. ஏனெனில் நாம் குறிப்பிடத்தக்க சர்ச்சைக்குரிய சவாலான விடயங்களைக் கையில் எடுக்கவும் அவற்றுக்கு முகங் கொடுக்கவும் வேண்டி இருந்தது.

கடந்த மூன்று வருடங்கள் மிகவும் சவாலான காலங்கள். ஆனால் நாங்கள் அவற்றை எல்லாம் கடந்து வந்தோம். ஆனால் எமது அமைப்பு தனித்திருக்கின்ற மனிதர்களின் கூடாரமாகவோ சமூகநல நிறுவனமாகவோ உருவாவதிலோ மாறுவதிலோ ஒருவருக்கும் விருப் பமிருக்கவில்லை. இவையெல்லாம் நம்மை மேலும் இறுக்கமாக ஒன்றிணைய வைத்தன.

**இலங்கையிலிருந்து நீங்கள் வெளியேற்றப்பட்ட பின்புலத்தை எங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான எனது முடிவு அன்றைய சூழ்நிலையால் உருவானது. நானாக நாட்டை விட்டு வெளியேறத் தீர்மானிப் பதற்குள்ளாகப் பலர் என்னை வெளியேறும்படி நீண்டகாலத்திற்கு முன்பே அறிவுறுத்தினர். சாதாரணமாக இலங்கையில் இவ்வாறான விடயங்களுக்காக முன்கூட்டியே எச்சரிக் கப்படுவதில்லை. ஆகவே இது தொடர்பான கடிதங்கள் அனுப்புவதோ பயமுறுத்துவதோ வழமையாக நடைபெறுவதில்லை. இதனால் இவ்வாறான முடிவுகள் நமது உள்ளுணர்வுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட எதிர்வினை களாகவே இருக்கின்றன.

அதாவது பயங்கரமான சுழல்கள் நம்மை சூழ்ந்துவருவதை நாம் உணர்கின்ற சந்தர்ப்பங்களில் நமது உள்ளுணர்வானது நாம் வாழ்வதற்கு ஏற்றவகையில் நம்மை வழிநடாத்தும். நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முதலான கடைசி மூன்று மாதங்களும் எனது நாளந்த வாழ்வின் வழமையான செயல்பாடுகளை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்தேன். ஏனெனில் நான் எழுதுவது மனித உணர்ச்சிகளைக் கிளர்ச்சியடைய வைக்கக் கூடியது எனவும் இதன் விளைவால் ஏற்படும் பாதிப்புகள் மீள் நிவர்த்திக்க முடியாதவை எனவும் என் நண்பர்களும் சகசெயல் பாட்டாளர்களும் சிந்தித்தனர்.

ஆகவே எனது வீட்டிலிருக்காது தூரத்தில் எங்கேயாவது இருந்தேன். ஒரு நாள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை செய்யப்பட்டார். **(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரையும் கண்ணீர் வெள்ளத்தில் ஆழ்த்திய ஒரு உடலை ஆண்ட இரு தலைகள்


அவுஸ்திரேலியாவில் ஒரு உடலில் இரு தலையுடன் பிறந்த பெண் குழந்தைகள் பரிதாபமாக இறந்துள்ளது.
கடந்த மே மாதம் 8ம் திகதி அவுஸ்திரேலியா தலைநகர் சிட்னியில் டிஸ்ரொசொபஸ் நோயால் பாதிக்கபட்டு இரண்டு தலை மற்றும் ஒரு உடலுடன் இந்த இரட்டை பெண் குழந்தைகள் பிறந்தது.

ஃபைத் மற்றும் ஹோப் என பெயரிட்ட இந்த குழந்தைகள் உயிருக்கு போராடி வந்ததால், தொடர்ந்து 17 நாட்களுக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சைய ளித்துள்ளனர்.
ஆனால் சிகிச்சை பலனின்றி கடந்த 27ம் திகதி உயிரிழந்த இந்த இரட்டை குழந்தைகளின் இறுதி சடங்கில், பலர் கலந்துகொண்டனர்.

இதில் பங்கேற்ற அனைவரும் ரோஜாப்பூ நிறத்தை குழந்தைகளின் நினைவு சின்னம் என முடிவுசெய்தனர்.
மேலும் அவர்கள் வாழ்ந்ததற்கு அடையாளமாக நாளென்றிற்கு விகிதம் மொத்தம் 19 நாட்களுக்கு, 19 புறாக்களை பறக்கவிட்டனர்.
இறுதியில் வெள்ளை மற்றும் ரோஜாப்பூ நிற பலூன்களை பறக்கவிடப்பட்டதுடன், இரட்டை குழந்தைகளும் சவப்பெட்டியில் வைத்து கண்ணீருடன் புதைத்துள்ளனர்.



# பூமியை விட பிரம்மாண்டமான கோள் கண்டுபிடிப்பு



பூமியை விட இரண்டு மடங்கு பெரியதாக இருக்கும் புதிய கோள் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
பூமியை விட 17 மடங்கு எடையும், இரண்டு மடங்கு பெரியதுமான கெப்ளர்-10 சி என்ற புதிய கோள், அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு ஸ்மித்சானியன் வானியல் பவுதிக மையத்தை சேர்ந்த சேவியர் டைஸ்கியூ என்ற விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பூமியிலிருந்து சுமார் 6 டிரில்லியன் மையிலில் உள்ள இந்த புதிய கோளின் சுற்றளவு 18 ஆயிரம் மைல்கள் ஆகும்.

இந்த கோள் 45 நாட்களுக்கு ஒரு முறை சூரியனைப்போன்ற ஒரு நட்சத்திரத்தை சுற்றி வருகிறது என தெரியவந்துள்ளது.

இதுகுறித்து சேவியர் டைஸ்கியூ கூறுகையில், இந்தக் கோளை நாங்கள் கண்டுபிடித்திருப்பது எங்களுக்கு மிகுந்த வியப்பை அளித்துள்ளது என கூறியுள்ளார்.

மேலும் இந்த கோளில் வாழ்வதற்குறிய சாதகமான அத்தனை அம்சங்களும் நிறைந்துள்ளதாக, இந்த ஆய்வில் ஈடுபட்ட மற்றொரு விஞ்ஞானியான டிமிட்டர் சாஸ்செலோவ் தெரிவித்துள்ளார்.

# தாயை வாழ வைத்த கரு



பிரித்தானியாவில் பெண் ஒருவர் தனது உயிரை காப்பாற்ற கருவை கலைக்கும் உருக்கமான முடிவை எடுத்துள்ளார்.
பிரித்தானியாவின் யார்க் நகரில் வசித்து வந்த லூசி பக்பி (28) என்ற பெண் கருவுற்றிருந்தார்.

ஆனால், மருத்துவர்கள் லூசிக்கு இதய நோய் உள்ளதால் குழந்தை பெற்றெடுக்கும் போது அவர் இறப்பதற்கு வாய்ப்புள்ளதாக எச்சரித்துள்ளனர்.

இதனால் ஏற்கனவே இரண்டு மகன்கள் உள்ள லூசி, தனது மகன்கள் தாய் இல்லாமல் போய்விடக் கூடாது என்பதற்காக கருவை கலக்கும் உருக்கமான செயலில் ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்து லூசி கூறுகையில், தான் சரியான முடிவு தான் எடுத்தேனா இல்லையா என சந்தேகப்படுவதாகவும், தனது மகன் 17 வார குழந்தையாக வயிற்றில் இருக்கும் போதே சத்தத்தை உணர்ந்ததகவும் கண்ணீர் விட்டார்.

லூசி கடந்த ஏப்ரல் 2013ம் ஆண்டு கர்ப்பமாக இருந்த போது தான் அவரது நோய் தெரியவந்துள்ளது. இதனை அடுத்து ஜேடன் என பெயரிட இருந்த தனது மகனால் தான் அவர் தற்போது உயிருடன் இருப்பதாக கூறியுள்ளார்.

மேலும் இந்த கருவிற்கு இறுதிச்சடங்கும் செய்து விட்டார். தற்போது லூசி தனது நோய்காக மருந்துகள் உட்கொண்டு வருகிறார்.

# காதலை பிரித்து வைத்த ஜோசியரை வெளுத்து வாங்கிய காதலன்



ஜேர்மனியில் நபர் ஒருவர் ஜோசியரின் அறிவுரையினால் தனது காதலி, தன்னைவிட்டு பிரிந்து விட்டதால் அவரை வெளுத்து வாங்கியுள்ளார்.
ஜேர்மனியின் பிரபல ஜோசியரான எஸ்மெரல்டா (68) தற்போது மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் உயிருக்காக போராடி வருகிறார்.

இவர் மருத்துவமனையில் இருப்பதற்கு காரணம் என்னவெனில், மெட்டின் (43) என்ற நபர், ஒரு பெண்ணை ஒரு வருடமாக காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில், இந்த ஜோசியர், மெட்டின் காதலியிடம் நீ இவரை விட்டு, உன் பழைய காதலனுடன் சேர்ந்தால் சந்தோசமாக வாழ்வாய் என்று கூறியுள்ளார்.

இதனைக் கேட்ட அந்தப்பெண்ணும், மெட்டினை பிரிந்து பழைய காதலனுடன் சென்றுவிட்டார். இதனால் கோபம் கொண்ட மெட், ஜோசியரின் முகவரியை கண்டுபிடித்து அவரை அடித்து துவைத்துள்ளார்.

# தெரியாமல் சகோதரியை மணந்த அண்ணன் தெரிந்ததும் விவாகரத்து

சவுதி அரேபியாவில் திருமணமான தம்பதியர் 25 வருடங்களுக்கு பின் தாங்கள் உடன்பிறந்தவர்கள் என்பதை அறிந்துள்ளனர்.
சவுதியில் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன் திருமணமான தம்பதியர் ஒருவர் 7 குழந்தைகளுடன் வசித்து வந்தனர்.

இந்நிலையில் தன் மனைவி தான், சிறுவயதில் தொலைந்து போன தனது இளைய சகோதரி என உறவினர் ஒருவர் மூலம் இத்தம்பதிருக்கு தெரியவந்துள்ளது.

இதன்பேரில் இவர்கள் மரபணு சோதனை செய்து பார்த்தபோது, தாங்கள் இருவரும் அண்ணன் தங்கை என்ற உண்மை உறுதியானது.

இதனால் அதிர்ச்சி அடைந்த அந்நபர் மனைவியாகிய சகோதரியை விவாகரத்து செய்ய முடிவு செய்து நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார்.

இதனையடுத்து அவர்கள் தந்த ஆதாரங்களை ஏற்றுக்கொண்டு நீதிமன்றமும் விவாகரத்து வழங்கியது.

இதற்கிடையே சகோதரியை திருமணம் செய்த நபருக்கு கடும்தண்டனை வழங்கவேண்டும் என சவுதி அரேபியா முப்தி என்ற அமைப்பு பரிந்துரை செய்தபோதிலும் அதை ஏற்க நீதிமன்றம் மறுத்துள்ளது.

# ஆகாயத்தில் அறுசுவை பறிமாற்றம் அசத்திய சமையற்கலைஞர்

பெல்ஜியம் நாட்டில் வானத்தில் சமைத்து, பரிமாறப்பட்ட அறுசுவை விருந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.
பெல்ஜியம் தலைநகர் புருசெல்ஸ்ஸில் வியக்க வைக்கும் அறுசுவை விருந்து வானத்தில் உலவியபடியே பரிமாறப்பட்டது.

இதற்காக குடை ராட்டினம் போன்றதொரு வட்ட வடிவில் சாப்பிடும் அறை தயாரிக்கப்பட்டது.

மேலும் அந்நகரில் உள்ள "பர்க் டியு சின்குவண்டெனேயர் என்ற உயர்ந்த கட்டடத்தின் உச்சியிலிருந்து கிரேன் இயந்திரத்தின் உதவியால், இந்த குடை ராட்டினம் நிலை நிறுத்தப்பட்டது.

இதன்பின் கைப்பக்குவம் மிகுந்த பிரபல சமையற்காரர் ஒருவர் அதில் இருந்தபடியே சுடச்சுட உணவு வகைகளை தயாரித்து அளிக்க, அவை வைனுடன் வாடிக்கையாளர்களுக்கு பறிமாறப்பட்டன.

அப்போது அங்கு பாதுகாப்பு பெல்ட்டுகளுடன் கட்டப்பட்டிருந்த வாடிக்கையாளர்கள் வியப்பில் ஆழ்ந்ததுடன், தாங்கள் இருப்பது விண்ணிலா அல்லது மண்ணிலா என ஆச்சரியத்தில் உறைந்தபடியே பறிமாறப்பட்ட உணவுகளை ருசிப்பார்த்தனர்.

# ஐரோப்பிய ஒன்றியத்தை மிரட்டும் கேமரூன்



பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக போவதாக மிரட்டல் விடுத்துள்ளார்.
பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட 28 நாடுகள் இணைந்து, ஐரோப்பிய ஒன்றியம் என்ற பொதுவான அமைப்பின் நாடாளுமன்றம் பெல்ஜியம் நாட்டின் தலைநகர் புருஸல்ஸ் நகரில் செயல்பட்டு வருகிறது.

கடந்த வாரம் இங்கு நடைபெற்ற தேர்தலில், ஜேர்மனியின் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்க்கல் தலைமையிலான, "கிறிஸ்டியன் டெமாகிராட்ஸ்" அணியினர் மொத்தமுள்ள, 751 இடங்களில், 213 இடங்களை பிடித்து அமோக வெற்றி பெற்றுள்ளனர்.

ஜேர்மனியின் இந்த வெற்றி காரணமாய் அதன் ஆதிக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிகமாய் தொடர்ந்தால் பிரிட்டன் கடும் அதிருப்தி அடைந்துள்ளது.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றிய ஆணையத்தின் தலைவராக, லக்சம்பர்க் நாட்டின் முன்னாள் பிரதமர் ஜீன் கிளாடி ஜங்கர் பெயரை, ஜேர்மனியின் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கல், இரண்டு நாட்களுக்கு முன் அறிவித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள, பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன், "ஐரோப்பிய கமிசன் தலைவராக ஜங்கர் நியமிக்கப்பட்டால், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலக நேரிடும் என தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முல்லைத் தீவில்

பெறவுள்ள பன்னிரண்டு ஆட்கொணர்வு மனு வழக்காளிகளிற்கு ஆதரவாகவும், வலுச்சேர்க்கும் வகையிலும் காணாமல் போன உறவுகள் தொடர்பாக தங்களுடைய உணர்வை, தங்கள் அவலவாழ்வை, இயலாமையை வெளிப்படுத்தவும்

இந்தகவனயீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ் மாவட்டங்களை சேர்ந்த இராணுவத் தினரிடம்

சரணடைந்து காணாமல் போயுள்ள உறவுகளின் குடும்பத் தவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபை தவிசாளர்கள், உறுப்பினர்கள் அனைவரையும் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் இணைந்து கொள்ள வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

### தமிழீழத்துக்கான

ஈழம் அமைக்க இலங்கைத் தமிழர்களிடமும் புலம்பெயர்ந்த தமிழர்களிடமும் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்த வேண்டும்,

பாக்கு நீரிணையில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளையும் அவர்களது பாதுகாப்பையும் உறுதிசெய்ய வேண்டும்,

1974, 76ஆம் வருட ஒப்பந்தங்களை மத்திய அரசு ரத்துசெய்து, கச்சத்தீவை மீட்க வேண்டும்,

என கோரியிருக்கிறார்.

### இலங்கையின்

தேசியப் பிரச்சனை தொடர்பாக, தாங்கள் புதியதோர் அணுகு முறையை மேற்கொள்ளல் வேண்டும் என்ற வேண்டுகோளைத் தங்களின் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்க விரும்புகின்றோம் என அக்கடிதத்தில் தெரிவித்துள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன்,

ஈழத்தமிழனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான பரிகாரநீதி கிடைப்பதற்கு, சகல வழிகளிலும் தங்களாலான பங்களிப்பை வழங்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

கடந்தகால நிகழ்வுகளின் பின்னணியிலும் வரலாறு எமக்கு உணர்த்தியுள்ள படிப்பினையின் அடிப்படையிலும், எமது பாரம்பரிய தாயகத்தில் எமது இனத்தின் தனித்துவத்தைப் பேணுவதற்கும், எமது இனம் அங்கு நிலைத்து நிற்பதற்கும், சுதந்திரமும் இறைமையும் படைத்த தமிழீழ அரசே எமக்குள்ள ஒரேயொரு தீர்வு என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இத்தகைய ஒரு தீர்வே இந்திய நாட்டின் பூகோள அரசியல் நலன்களுக்கும் ஏற்றதாக அமையும் என நாம் நம்புகின்றோம் எனவும் இந்தியப் பிரதமருக்கு வி.உருத் தரகுமாரன் அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### வாக்காளர் பதிவு

ஆண்டிலும் ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வாக்காளர் பதிவு இடம்பெறுவதாக சுட்டிக் காட்டியுள்ளது. இந்த நடவடிக்கையின் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர்கள் வாக்களிக்கும் உரிமையை இழந்து விடுவதாக கபே தெரிவித்துள்ளது.

கணக்கெடுப்பில் பங்கேற்க வாக்காளர்கள் நாட்டம் காட்டாமை மற்றும் வாக்காளர் பதிவு தொடர்பிலான நடவடிக்கைகளை அதிகாரிகள் உரிய முறையில் மேற்கொள்ளாமை ஆகிய காரணிகளினால் இவ்வாறு வாக்காளர் பதிவு துல்லியமான முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை என குறிப்பிட்டுள்ளது. ஒவ்வொரு தடவையும் சுமார் 400,000 புதிய வாக்காளர்களை வாக்காளர் இடாப்பில் இணைத்து கொள்ளும் அதேவேளை, பெரும் எண்ணிக்கையிலானவர்களின் பெயர்கள் விடுபட்டு போய்விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்காளர் பதிவு சரியான முறையில் நடைபெறாவிட்டால் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் தேர்தலை நடாத்த முடியாது என சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையில் தற்போது அமுலில் உள்ள வாக்காளர் பதிவு முறைமை காலம் கடந்ததொன்றாகும் என கபே அறிவித்துள்ளது. புதிய முறைமை ஒன்றினை அறிமுகம் செய்து துல்லியமாக வாக்காளர்களை பதிவு செய்ய வேண்டியது அவசியமாகின்றது என கபே சுட்டிக்காட்டியுள்ளது.

## அங்கவீனமான முன்னாள் பெண் போராளி மீது மர்ம நபர்கள் தாக்குதல்

கிளிநொச்சி- செல்வாநகர் பகுதியில் போரில் காயமடைந்து நிரந்த அங்கவீனமாக்கப்பட்ட முன்னாள் பெண் போராளியின் வீட்டினுள் புகுந்த மர்ம நபர்கள் குறித்த பெண்ணின் கணவர் எங்கே எனக்கேட்டு பெண்ணை கடுமையாக தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கிளி.செல்வாநகர் நாகதம்பிரான் ஆலயத்திற்கு சமீபமாக உள்ள வீடொன்றில் வசிக்கும் அனுஸ்குமார் சுமதி என்ற இரு பிள்ளைகளின் தாயான முன்னாள் போராளியின் வீட்டிற்கு நேற்று மாலை 5மணியளவில் முழுமையாக முகம் மறைக்கப்பட்ட தலைக்கவசங்கள் அணிந்தவாறு இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்ம நபர்கள் வீட்டினுள் புகுந்து உன்னுடைய கணவர் எங்கே என குறித்த பெண்ணிடம் கடும் தொனியில் கேட்டுள்ளதுடன் அந்தப் பெண்ணை பொல்லுகள் தடிகளால் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர்.

இதன் பின்னர் குறித்த பெண் கூச்சலிட்டு அயலவர்களை அழைத்துபோது அயலவர்கள் அந்த இடத்தில் கூடிய நிலையில் மர்மநபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். மேலும் குறித்த பெண்ணும் அவருடைய கணவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் போராளிகளாக இருந்துள்ளனர்.

இந்நிலையில் போரில் காயமடைந்து நிரந்தர அங்கவீனமான நிலையில் (இடுப்பிற்கு கீழ் இயங்காது) படுக்கையில் குறித்த பெண் இருந்துள்ளார். கணவர் போரின் பின்னர் வெளிநாடு ஒன்றிற்குச் சென்றுள்ளார். மேலும் தற்போது இந்தப் பெண் அவருடைய பெற்றோரின் கண்காணிப்பில் இருக்கின்றார்.

இந்நிலையில் கணவரை தேடிச் சென்ற நபர்களே தன்னை தாக்கியதாக அவர் தெரிவித் துள்ளார்.

எனினும் கணவரை எதற்காக யார் தேடினார்கள் என்பது தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என அவர் கூறியிருப்பதுடன் தற்போது அவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

### ஹக்கீமை கட்சித்

விசேட உரையாற்றுவதற்கு இடமளிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

கட்சித் தலைவர் என்ற ரீதியில் நாடாளுமன்றில் உரையாற்ற அனுமதியளிக்குமாறு ஹக்கீம், பிரதி சபாநாயகரிடம் நேற்று கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கையை பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி நிராகரித்துள்ளார்.

நான்கு பெயர்கள் மட்டுமே கட்சி தலைவர்களாக உள்ளடக் கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

### சீரற்ற காலநிலை

குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் சிலர் காயமடைந் துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மலையகத்தில் தொடார்ந்தும் இடியுடன் கூடிய கனமழை பெய்வதுடன், சீரற்ற காலநிலையே நிலவுகின்றது.

இதனால் ஹட்டன் குடாகம மற்றும் கொட்டகலை கொமர்சல் ஆகிய பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

சீரற்ற காலநிலை தாக்கத்தினால் இதுவரையில் 27 ஆயிரத்து 243 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர இதனை தெரிவித்துள்ளார்

இந்த எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அவர் கொழும்பில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்தநிலையில் அனர்த்த நிலையின் போது உயிரிழந்தோரின் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது. 8 பேர் காயமடைந்துள்ளனர்.

களனி கங்கை, கிங் கங்கை, நில்வள கங்கை மற்றும் ஜின் கங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக வடிகால் அமைப்பு திணைக்களம் அறிவித்துள்ளது.

வான் கதவுகள் திறப்பு

மலையகத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் அதிகரித்ததன் காரணமாக நீர் வெளியாகின்றன.

அத்தோடு லக்ஸபான நீர்தேக்கத்தில் 3 வான்கதவுகள் 2 அடி அளவில் திறந்துள்ளதாகவும் இதனால் இந்த இரண்டு நீர்தேக்கத்தில் நீர் வெளியாகின்றமையால் களனி ஆற்றில் நீர் மட்டம் அதிகரித் துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவிக்கின்றது.

இதன் காரணமாக மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பீ.ஜீ.குமாரசிரி தெரிவிக்கின்றார்.

### கைதான இந்திய

பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை தலைமன்னார் பகுதியில் கைதான இந்திய மீனவர்களை நல்லெண்ண அடிப் படையில் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதாக ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கைதான மீனவர்களை 16 ஆம் திகதி வரையில் தடுத்து வைக்குமாறு திங்கட்கிழமை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தப் பிரச்சினையில் தலையிட்டு அனைவரையும் உடன்விடுதலை செய்யுமாறு நேற்றிரவு உத்தரவிட்டார்.

### த.தே.ம.மு

மாலை ஐந்து மணியளவில் சிவிலுடையில் சென்ற இராணுவத் தினரே கட்சி அலுவலகத்தில் விபரங்களை திரட்டிச்சென்றுள்ளனர்.

எனினும் விபரங்கள் சேகரிப்பதாயின் பொலீசார் வந்திருக்க முடியுமெனவும் அப்படியிருக்க இராணுவத்தினர் அலுவலகத்திற்கு வந்தமை தம்மை அச்சுறுத்தும் செயற்பாடு என கட்சித்தலைமை கருத்து வெளியிட்டுள்ளது. சம்பவ வேளையில் கட்சியின் தலைவர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் எவரும் இருந்திருந்திருக்கவில்லை என கூறப்படுகின்றது.

## கிழக்கு பல்கலையிலும் விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்பு

கிழக்குப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தினர் வந்தாறுமூலை வளாகத்தின் முன் அடையாள பணிப் பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் தமது கோரிக் கைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களையும் மக்களுக்கு வழங்கினர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஆய்வுப் பணிகளுக்கான கொடுப்பனவு தொடர்பில் நிபந்தனை விதிக்கக் கூடாது உள்ளிட்ட சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமது கோரிக்கைகளுக்கு உயர்கல்வி அமைச்சு உரிய தீர்வினை வழங்கத் தவறியுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்தனர். தமது கோரிக்கைககளை அரசாங்கம் தொடர்ந்தும் உதாசீனம் செய்தால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் விரிவுரை யாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாடு முழுவதிலும் அடையாள பணிப் பகிஸ்கரிப்பு போராட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தா வெற்றி: குஷியில் குத்தாட்டம் போட்ட ஷாரூக்கான்



ஐ.பி.எல் இறுதிப் போட்டியில் கொல்கத்தா அணி கிண்ணம் வென்றதைத் தொடர்ந்து அதன் உரிமையாளர் சாருக்கான் உற்சாகத்தில் துள்ளிக் குதித்து நடனம் ஆடினார்.

பெங்களூர் சின்னசாமி அரங்கத்தில் நேற்று நடைபெற்ற ஐ.பி.எல் இறுதிப்போட்டியில் கொல்கத்தா அணி பஞ்சாப் அணியை வென்று கிண்ணத்தை இரண்டாவது முறையாக கைப்பற்றி அசத்தியது.

இந்த வெற்றி குறித்து பேசிய கொல்கத்தா அணியின் உரிமையாளர் சாருக்கான், மகத்தான இந்த வெற்றியை எனக்கு பெற்று தந்த கம்பீர் மற்றும் அவரது குழுவினருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.இந்த வெற்றிக் கிண்ணத்தை எனது இளையமகன் அப்ரமுக்கு பரிசாக அளிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

மேலும் தனது உற்சாகத்தை வெளிப்படுத்தும் வண்ணம் மைதானத்தில் அவர் நடித்த படத்தின் பாடலுக்கு நடனம் ஆடி வெற்றியைக் கொண்டாடினார்

## திருமணத்திற்கு நீச்சல் உடையில் வந்த செரீனா வில்லியம்ஸ்

தோழியின் திருமணத்தில் நீச்சல் உடையில் கலந்து கொண்ட பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் பிரபல டென்னிஸ் வீராங்கனை.

பிரபல டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியசின் தோழி கரோலின் வோஙினியாகி என்பவர் பிரபல கோல்ப் வீரர் ரோரி மெக்லேரியை கடந்த 3 வருடங்களாக காதலித்து வந்தார்.

இவர்களுக்கு கடந்த டிசம்பர் மாதம் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது.இவர்களது திருமணம் சமீபத்தில் மியாமி கடற்கரையில் வெகு விமர்சையாக நடந்தது.திருமணத்தில் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த திருமணத்தில் செரீனா வில்லியம்சும் கலந்து கொண்டார்.படுகவர்ச்சியான சிறுத்தையின் தோல் போல் புள்ளிகள் போட்ட நீச்சலுடையில் திருமணத்திற்கு வந்திருந்த செரீனா வில்லியம்ஸ், தனது தோழியை வாழ்த்தியதோடு விலையுயர்ந்த பரிசையும் கொடுத்தார்.

செரீனா வில்லியம்ஸின் நீச்சலுடை காஸ்ட்யூமை பார்த்து திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். ஆனால் எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல் நீச்சலுடையிலேயே புகைப்படக்காரர்களுக்கு போஸ் கொடுத்தார்.

திருமணத்தில் கலந்துகொண்டவுடன் அப்படியே அருகில் உள்ள கடலில் சென்று குளிக்க சென்றுவிட்டார். இவரது படங்கள் அவரது இன்ஸ்டா கிராம் பக்கங்களிலும் இடம் பெற்று உள்ளது.

# இலங்கை வீரர் சச்சித்ர சேனாநாயக்க முறையற்ற பந்து வீசுவதாக குற்றச்சாட்டு



இலங்கை கிரிக்கட் அணியின் சுழல் பந்துவீச்சாளர் சச்சித்ர சேனாநாயக்க முறையற்ற பந்துவீச்சை மேற்கொண்டார் என்று முறையிடப்பட்டுள்ளது.

இறுதியாக இங்கிலாந்து அணியுடன் இடம்பெற்ற நான்காவது சர்வதேச ஒருநாள் கிரிக்கட் போட்டியில் முறையற்ற பந்துவீசப்பட்டுள்ளதாக நடுவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தப்போட்டியில் இலங்கை அணி இங்கிலாந்து அணியை 7 ஓட்டங்களால் வெற்றிக்கொண்டது.


இந்நிலையில் சேனாநாயக்க முறையற்ற பந்துவீச்சை மேற்கொண்டார் என்று நடுவர்கள் முறையிட்டுள்ளனர்.

மைதான நடுவர்களான மாரிஸ் எராஸ்மஸ், இயன் க்ளொவ்ட், தொலைக்காட்சி நடுவர் கிரிஸ் க்காபினி மற்றும் போட்டி நடுவர் ஜெப் க்ரோவ் ஆகியோர் சேனாநாயக்கவின் முறையற்ற பந்துவீச்சு தொடர்பில் அறிக்கை ஒன்றை இலங்கை அணியின் முகாமையாளருக்கு நேற்று வழங்கியுள்ளனர்.

இதேவேளை நாளை நடைபெறவுள்ள இங்கிலாந்து அணியுடனான ஐந்தாவதும் இறுதியுமான போட்டியில் சேனாநாயக்க பங்கேற்பார் என்று ஸ்ரீலங்கா கிரிக்கட் அறிவித்துள்ளது.

ஏற்கனவே முத்தையா முரளிதரனும் அவுஸ்திரேலியாவில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கு உள்ளாகி பின்னர் அதில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் இந்திய அணி தோல்வி



உலகக்கிண்ண ஹாக்கி போட்டியில் இந்திய அணி கடைசி நிமிடம் கோல் வாங்கியதால் 1-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்திடம் தோல்வியுற்றது.

13வது உலகக்கிண்ண ஆண்கள் ஹாக்கி போட்டி நெதர்லாந்தில் உள்ள ஹாக்கில் நடந்து வருகிறது. வருகிற 15ம் திகதி வரை நடைபெறும் இந்த போட்டியில் பங்கேற்றுள்ள 12 அணிகள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் இடம் பிடித்துள்ள அணிகள், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் ஆட்டங்கள் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு முன்னேறும்.

இந்த போட்டியின் 3வது நாளான நேற்றுமுன்தினம் நடந்த 2வது லீக் ஆட்டத்தில் இந்திய அணி, இங்கிலாந்துடன் மோதியது. இரு அணிகளும் தாக்குதல் ஆட்டத்தில் கவனம் செலுத்தின.

27வது நிமிடத்தில் இங்கிலாந்து அணி முதல் கோலை அடித்தது. அந்த அணி வீரர் மார்க் கிலெக்கான் பெனால்டி கார்னர் வாய்ப்பை பயன்படுத்தி இந்த கோலை அடித்தார்.

30வது நிமிடத்தில் இந்திய அணி பதில் கோல் திருப்பியது. தரம்வீர்சிங் பீல்டு கோல் போட்டார். முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தன.

பின்பாதி ஆட்டத்திலும் இரு அணிகளும் கோல் அடிக்கும் முனைப்பில் தீவிரம் காட்டினார்கள். பெல்ஜியத்துக்கு எதிரான ஆட்டத்தை போல் இந்த ஆட்டத்திலும் இந்திய அணி கடைசி நிமிடத்தில் கோட்டை விட்டது.

கடைசி நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி இங்கிலாந்து வீரர் சைமன் மென்டீஸ் கோல் அடித்தார். முடிவில் இந்திய அணி 1-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்திடம் தோல்வியுற்றது.

# எங்களை விமர்சித்தவர்களுக்கு தக்க பதிலடி கம்பீர் நறுக் பதில்

வீரர்களின் கூட்டு முயற்சியால் தான் ஐபிஎல் கிண்ணத்தை வென்றோம் என்று கம்பீர் கூறியுள்ளார்.

2012ம் ஆண்டு ஐ.பி.எல். கிண்ணத்தை வென்று இருந்த கொல்கத்தா அணி தற்போது பஞ்சாப்பை வீழ்த்தி 2வது முறையாக சாம்பியன் பட்டம் பெற்றது.

பஞ்சாப் அணியை வீழ்த்தி ஐ.பி.எல். கிண்ணத்தை கைப்பற்றியது குறித்து கொல்கத்தா அணித்தலைவர் கம்பீர் கூறியதாவது, முதல் 7 ஆட்டத்தில் நாங்கள் 2 வெற்றி தான் பெற்றோம். 5 ஆட்டத்தில் தோற்றோம்.

இதை தொடர்ந்து கொல்கத்தா அணியின் கதை முடிந்து விட்டது என்று சொல்லப்பட்டது. ஆனால் நாங்கள் தொடர்ந்து வெற்றிகளை பெற்று ஐ.பி.எல். கிண்ணத்தை வென்று உள்ளோம்.

எங்களை விமர்சித்தவர்களுக்கு நாங்கள் சரியான பதிலடி கொடுத்து திறமையை நிரூபித்து காட்டி இருக்கிறோம். இது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் வீரர்களின் கூட்டு முயற்சியால் ஐ.பி.எல். கிண்ணத்தை 2வது முறையாக கைப்பற்றி இருக்கிறோம். நெருக்கடியில் வீரர்கள் மிகவும் சிறப்பாக விளையாடினார்கள் எனவும் கூறியுள்ளார்.

மேலும், சிறிய மைதானமான இங்கு 200 ஓட்டங்கள் இலக்கை எடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. மனி' பாண்டேயின் ஆட்டம் மிகவும் அபாரமாக இருந்தது.

யூசுப்பதான் தனக்குரிய பாணியில் நன்றாக ஆடினார். இதேபோல கடைசியில் வெற்றிக்கு பங்கு வகித்த பியூஸ் சாவ்லாவும் சிறப்பாக ஆடினார் என்று கூறியுள்ளார்.


## சகல விதமான பதிப்பக வேலைகளுக்கும்

மன்னாரில் சகலவிதமான பதிப்பக வேலைகளும் ஒரேஇடத்தில் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

➡ **நித்திலம் பதிப்பகத்திற்கு** ⬅

☞ பனர் (Banner) தரம் 1-சதுர அடி - 70/=
☞ ஸ்ரிக்கர் (Sticker) தரம் 1-சதுரஅடி -120/=

☞ இறப்பர்ஸ்ராம் - 300/= இலிருந்து 10நிமிடத்தில் தர உத்தரவாதத்துடன்

முகவர்களிற்கும் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட சேவை பெறுனருக்கும் விசேடவிலைக்கழிவு வழங்கப்படும்

* விசிட்டிங்காட்
* பில் புத்தகங்கள்
* லேபல்கள்
* நினைவு மலர்கள்
* பருவகால மலர்கள்
* சஞ்சிகைகள்
* விசிட்டிங்காட்
* பில் புத்தகங்கள்
* லேபல்கள்
* நினைவு மலர்கள்
* பருவகால மலர்கள்
* சஞ்சிகைகள்
* போஸ்ரர்கள்
* பரிட்சை வினாத்தாள்கள்ள
* விளம்பரப் பலகைகள்
* கடிதத் தலைப்புக்கள்
* சான்றிதழ்கள்
* கலர் பிறிண்ட்
* நிழல் பிரதி -03/=

☞ 4கலர் வேலைகள்குறைந்த கட்டணத்தில்

இவை அனைத்தும் மன்னாரிலே தயாரிக்கப்படுகின்றன ஏனையமாவட்டங்களை நம்பியிருக்க வேண்டிய அவசியமில்லை அதிக கட்டணத்தை வழங்கி ஏமாறாதீர்கள் மன்னாரில் பல போலி முகவர்கள் உள்ளதால் குறைந்த கட்டணம் உள்ளஇடத்தை தெரிவு செய்யுங்கள் அரச ,அரசசார்பற்ற நிறுவனங்கள்,பொது அமைப்புக்கள் பாடசாலைகள்,தன்னார்வ சமூக சேவையாளர்கள்,ஆகியோருக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும் மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் தொலை பேசி இலக்கத்திற்கு நாடுங்கள் நித்திலம் பதிப்பகத்திற்கு

**பிரதான வீதி , சின்னக்கடை , மன்னார்**
**0232223545 - 077-8355464**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தால் 04.06.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.